



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 344 | 06.06.2026 | SATURDAY | VAIKASI : 23 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 344 | 06.06.2026 | சனிக்கிழமை | வைகாசி : 23 | விலை : ரூ.5/-


## தனியார் பள்ளிகளின் கட்டண அறிவிப்பு பலகை விவகாரம்

# "தமிழக அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு"

சென்னை: ஜூன்.6-

தனியார் பள்ளிகள் கல்வி கட்டணங்களை பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளில் வெளியிட வேண்டும் என்ற மாநில தகவல் ஆணையம் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநரகம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிரான மனுவுக்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டண விவரங்களை, பள்ளிகளின் விளம்பர பலகைகளில் வெளியிடுவதை கட்டாயமாக்கும்படி, தனியார் பள்ளிகள் இயக்குநருக்கு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மே 25 ஆம் தேதி உத்தரவிட்டது.

அதன்படி, ஜூன் 5ஆம் தேதிக்குள் கட்டண விவரங்களை விளம்பர பலகையில் வெளியிடும்படி, அனைத்து தனியார் நர்சரி, பிரைமரி, மெட்ரிக், சிபிஎஸ்இ, பிற வாரிய பள்ளிகளுக்கு தனியார் பள்ளிகள் இயக்குநர் ஜூன் ஒன்றாம் தேதி



சுற்றறிக்கை பிறப்பித்தார்.

இந்நிலையில், மாநில தகவல் ஆணைய உத்தரவையும், தனியார் பள்ளிகள் இயக்குநர் பிறப்பித்த அறிவிப்பையும் ரத்து செய்யக் கோரி அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்களின் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கே.பழனியப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி எம்.தண்டபாணி முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், 'தகவல் உரிமைச் சட்டம், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சிபிஎஸ்இ போன்ற மத்திய அரசின் பாடத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பள்ளிகளை தமிழக அரசு கட்டுப்படுத்த முடியாது' என வாதிடப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில், 'தகவல் ஆணைய உத்தரவின் அடிப்படையில் கல்வி கட்டணத்தை வெளியிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து தனிப்பட்ட பள்ளிகள் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும். சங்கத்தின் சார்பில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. விதிகளின்படி பள்ளிகள் கட்டண விவரங்களை வெளியிட வேண்டும்' என வாதிடப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, கட்டண விவரங்களை வெளியிட மறுக்க முடியாது என்றும், தகவல் உரிமைச் சட்டத்தில் விலக்களிக்கும் பிரிவில் கூட, பொது நலன் சார்ந்த விவரங்களை வெளியிட வேண்டும் என தெரிவித்துள்ளது என்றும் தெளிவுபடுத்தினார்.

கல்விக் கட்டணம் என்பது கருப்புப் பணம் அல்ல என்பதால், அதன் விவரங்களை சொல்லலாமே எனக் தெரிவித்ததுடன், வழக்கு குறித்து ஜூன் 18ம் தேதிக்குள் பதிலளிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தார்.

## தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் ஜூன் 18ல் தொடக்கம்



சென்னை: ஜூன்.6-

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் ஜூன் 18ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் விஜய் தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்துவரும் நிலையில், இதுவரை 3 முறை அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் இன்று காலை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், சட்டப்பேரவை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம், 2026 ஆம் ஆண்டு, ஜூன் 18ம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடும். அச்சமயம் தமிழ்நாடு ஆளுநர் உரை நிகழ்த்த உள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் இதுவாகும். 202627ம் நிதியாண்டுக்கான புதிய அரசின் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருப்பரங்குன்றம் 'சர்வே' தூணில் தீபம் ஏற்ற அரசு அனுமதிக்கக் கூடாது: இந்தியக் கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்



சென்னை: ஜூன்.6-

திருப்பரங்குன்றம் விவகாரத்தில், சிக்கந்தர் தர்கா அருகில் உள்ள சர்வே தூணில் தீபம் ஏற்ற அனுமதிக்கக் கூடாது என தவெக அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துக்கிறது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்: திருப்பரங்குன்றம் தீப விவகாரத்தில் தமிழக அரசு தனது நிலைபாட்டை வரும் ஜூன் 22ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என, மதுரை உயர் நீதிமன்றக் கிளை நேற்று (04.06.2026) உத்தரவிட்டுள்ளது. இது கவலை அளிக்கிறது.

திருப்பரங்குன்றத்தில் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நடப்பட்ட சர்வே தூணில் தீபம் ஏற்ற அனுமதிக்க வேண்டும் என வலது சாரி அமைப்பை சேர்ந்த சிலர் வற்புறுத்தி மோதல் நிலையை உருவாக்கி வருகின்றனர், நீதிமன்றத்திலும் வழக்குகளை தொடர்ந்துள்ளனர். அந்த சர்வே தூண் நடுவதற்கு முன்பிருந்தே அப்பகுதியில் சிக்கந்தர் தர்கா இருந்து வந்துள்ளது.

அந்த சர்வே தூணில் தீபம் ஏற்றும் நடவடிக்கைகளின் மூலம் அந்த தர்காவை எதிர்காலத்தில் அகற்றிட வேண்டும் என்று அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு, மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து, மக்களை மத ரீதியாக அணி திரட்டி, பிளவு படுத்தி அரசியல் ஆதாயம் அடைய வேண்டும் என்பதே வலது சாரி சக்திகளின் நோக்கமாகும்.

வலது சாரி சார்புள்ள சில நீதி அரசர்களும் இந்நோக்கத்திற்கு துணை நிற்பது நீதி பரிபலான முறையில் ஏற்பட்டுள்ள பேராபத்தாகும் என்பதை, மதச்சார்பற்ற கொள்கை வழி அரசு கருத்தில் கொள்ள வேண்டும் நீதிமன்றத்தை பயன்படுத்தி, அரசியல் சட்டத்திற்கு முரணான தங்களது தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளின் மூலம் சர்வே தூணில் தீபம் ஏற்றலாம் என்ற கருத்தை அடிப்படையிலேயே நிராகரிக்க வேண்டும்.

இத்தகைய முயற்சி நமது அரசியல் சட்டத்திற்கும், மதச்சார்பற்ற விழுமியங்களுக்கும், மத நல்லிணக்கத்திற்கும், மக்களின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கும் எதிரானதாகும். அது மட்டுமல்ல, 1991 வழிபாட்டு தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1991 (The Places Of Worship) (Special Provisions) Act, 1991-க்கும் எதிரானதாகும்.

இச்சட்டப்படி, 1947 ஆகஸ்டு 15க்கு முன்னர் வழிப்பாட்டுத் தலங்கள் எவ்வாறு இருந்ததோ அப்படியே தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும். 1947 ஆகஸ்டு 15க்கு முன்னர் வழிப்பாட்டு தலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் அதனை எதிர்த்து வழக்காட முடியாது. இந்த நிலையில் திருப்பரங்குன்றம் பிரச்சினையில், தமிழக அரசு கடந்த காலத்தில் மேற்கொண்ட சரியான நிலையை இப்போதும், வரும் காலத்திலும் உறுதியோடு முன்னெடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்துகிறது.

வலது சாரிகள் மற்றும் வலது சாரி சார்புடைய நீதியரசர்களின் அழுத்தத்திற்கு அடி பணியாமல் சட்ட ஒழுங்கையும், மதச்சார் பற்ற கொள்கை நிலையில் நின்று, சமூக நல்லிணக்கத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசியலமைப்பு சார்ந்த கடமையாகும். இதன் அடிப்படையில் திருப்பரங்குன்றத்தில், சிக்கந்தர் தர்கா அருகில் உள்ள சர்வே தூணில் தீபம் ஏற்ற அனுமதிக்கக் கூடாது என தமிழக அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது" என்று மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

## தமிழகத்தில் அடுத்து நடக்கும் பொதுத்தேர்தலில் நமது கட்சி போட்டியிடும்; அண்ணாமலை அறிவிப்பு



சென்னை, ஜூன்.6-

பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையின் ராஜினாமாவை பாஜ தலைமை ஏற்றுக் கொண்டுள்ளது.இந்த சூழலில் சமூகவலைதளத்தில் நேரலையில் அடுத்தக் கட்ட திட்டம் குறித்து பேசியதாவது: நான் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் 25ல் பாஜவில் இணைந்தேன். தமிழக மக்களுக்காக 6 ஆண்டு காலம் பணியாற்றுவதற்கு பெரிய வாய்ப்பு கிடைத்தது. அதை பெரிய பாக்கியமாக கருதுகிறேன்.என்னுடைய பாதை வேறு; வேறு பாதையில் பயணம் செய்ய வேண்டும்.

எனக்கு இலக்குகள் பெரியதாக உள்ளன. நிறைய மக்களை இணைத்து செயல்பட வேண்டும். ஒரு புதிய அரசியலை, அடிப்படை கட்டமைப்புகளை மாற்றக்கூடிய அரசியலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் இருக்கிறேன் என்பதை பாஜ தலைவர்களிடம் பண்போடு சொல்லிவிட்டு அந்த இயக்கத்தில் இருந்து வெளியே வந்துள்ளேன். இது தமிழர் பண்பு என்றும்கூட வைத்துக்கொள்ளலாம்.

அழைப்பு

தமிழர் பண்பு என்பதால் தலைமையை சந்திக்க டில்லி வந்தேன். நான் பாஜவில் இணைவதற்கு ஒரு நாள் முன்பாக நடிகர் ரஜினிகாந்த் என்னிடம் தொலைபேசியில் பேசினார். நான் அவரது இயக்கத்தில் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அப்போது, தமிழகத்துக்கு எது நல்லது; ரஜினிகாந்த்துக்கு எது நல்லது; அண்ணாமலைக்கு எது நல்லது என்ற மூன்று விஷயங்கள்தான் என் கண் முன்பாக இருந்தன. ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவது தமிழகத்துக்கு நல்லது.

ஆனால், கோவிட் பெருந்தொற்று காலமாக இருந்ததால் அவர் அரசியலுக்கு வராமல் இருப்பது அவருக்கு நல்லது. நான் பாஜவில் இணைவதாக பி.எல். சந்தோஷ் அவர்களிடம் வாக்குறுதி கொடுத்திருந்தேன். அதனால் அதை மீறக்கூடாது என நான் கருதினேன். இதனால், என்னை மன்னித்துவிடுங்கள்; என்னால் வர முடியாது என்று ரஜினிகாந்த் இடம் கூறிவிட்டு, மறுநாள் பாஜவில் இணைந்தேன். சில யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன். வேறு காரணம் இல்லை.

தமிழர்களின் உணர்வுகளை விட்டுக்கொடுத்தது இல்லை. தனிப்பட்ட ஒரு கட்சிக்கும் எனக்கும் எந்த பிரச்னையும் இல்லை. அனைத்து தேர்தலிலும் பாஜ தனித்து போட்டியிட விரும்பினேன். தமிழகத்தின் அடையாளம் பாஜவில் இருக்க வேண்டும் என்று சொல்லியே உள்ளாட்சி தேர்தல் உள்ளிட்டவற்றை சந்திக்க அறிவுறுத்தினேன். மீத்தேன், நிலக்கரி சுரங்கம், மேகதாது உள்ளிட்ட அனைத்திலும் தமிழக உரிமையை விட்டுக்கொடுத்தது கிடையாது.

மோடி மீது பெருமை வைத்துள்ள மனிதன் நான், அவருக்கு நான் பிரச்னையாக இருக்கக்கூடாது என கருதுகிறேன். ஓராண்டாகவே எனது கருத்து வேறுபாட்டை பாஜ தலைவர்களிடம் சொல்லி வருகின்றேன். தேர்தல் பணி முடித்துவிட்டு செல்லுமாறு கட்சி அறிவுறுத்தியதால் தான் இவ்வளவு நாள் தொடர்ந்தேன்.

மிகுந்த மரியாதை

மோடி நம்முடைய பிரதமர். அதில் எந்த மாற்றமும் இல்லை. பிரதமர் மோடி மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன். பிரச்னை, பிரச்சனை என தொடர்ந்து அவரை என்னால் தொந்தரவு செய்ய முடியாது. சின்ன, சின்ன கருத்து வேறுபாடுகள் இருந்தன. நான் கட்சியில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன் என முன்கூட்டியே கட்சி தலைமை நிர்வாகிகளிடம் தெரிவித்தேன். பாஜ தலைமையிடம் கருத்து வேறுபாடுகளை தொடர்ந்து சொல்லி வருகிறேன். டிசம்பர் மாதமே கட்சியை விட்டு வெளியே செல்கிறேன் என்பதை தெரிவித்திருந்தேன். தேர்தலை முடித்து விட்டு செல்லுங்கள் என கூறினார்கள். நான் மிக பொறுமையாக இருந்தேன்.

பெருமைமிகு இந்தியன்

தமிழகத்திற்கு எதிரான திட்டங்களை தொடர்ந்து எதிர்த்து வந்தேன். பெருமைமிகு இந்தியன், பாரம்பரியமிக்க தமிழன் என்பதே எனது அடையாளம். நீங்கள் தமிழனா அல்லது இந்தியனா என்று கூட வடமாநிலத்தவர்கள் என்னைக் கேட்டனர். பாஜ தலைமையுடன் கடந்த 18 மாதங்களாக கருத்து வேறுபாடு நிலவி வந்தது. அதனால், கட்சியில் இருந்து விலகும் முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

புதிய பாதை, புதிய இயக்கம்!

புதிய பாதை, புதிய இயக்கம், புதிய பரிமாணத்தோடு, பார்வையோடு ஆரம்பிக்க வேண்டும் என்பது என் ஆசை. தமிழகத்தில் அடுத்து நடக்கும் பொதுத்தேர்தலில் நமது கட்சி போட்டியிடும்; அதில் எந்த மாற்றமும் இல்லை. நிரந்தர எம்எல்ஏ., நிரந்தர அமைச்சர் என்பதை உடைக்க வேண்டும். பதவி என்பது ஒருவருக்கு மட்டுமே நிரந்தரம் இல்லை.

கோவையில் 'சென்டர் பார் எதிக்ஸ் அண்ட் பாலிடிக்ஸ்' என்ற மையத்தை, அரசியல் பயிற்சி அளிப்பதற்காக உருவாக்குகிறோம். கிராமங்கள் குறித்து மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் எவ்வளவோ சொல்லி இருக்கிறார் . அவர் மறக்க முடியாதவர். அவரது கருத்தியல் முக்கியமானது. தேசிய மனிதராக, பெருமை மிகுந்த தலைவராக வாழ்ந்து மறைந்துள்ளார். வாழ்வியல் தலைவராக கலாம் அய்யா வாழ்ந்து வந்தார்.

கட்சியாக மாறுவோம்

வளர்ந்த பாரதம் எனும் கனவோடு அரசியல் இயக்கம் தொடங்கி உள்ளேன். சாமானிய மக்களுக்காக அரசியலை முன்னெடுக்க உள்ளேன். அரசியல் என்பது ஒரு குடும்பத்தினருக்கு மட்டுமல்ல. நிரந்தர எம்எல்ஏ., நிரந்தர அமைச்சர் என்பதை உடைக்க வேண்டும். பதவி என்பது ஒருவருக்கு மட்டுமே நிரந்தரம் இல்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என யாருக்கும் நாம் போட்டியில்லை. உள்ளாட்சி தேர்தலுக்கும் வேட்பாளர்களை தயார்ப்படுத்துவோம். சமூக ஊடகங்களில் நாம் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் தற்போது நிலவும் அரசியல் சூழலில், மேலும் ஒரு புதிய கட்சி தேவை என்பதை நான் உணர்ந்துள்ளேன். என்னுடைய இயக்கம் கட்சியாக மாறும் நாளில் அனைத்தையும் அறிவிப்பேன். தற்போது தொடங்கியுள்ள இயக்கத்தில் நிறைய பேரை சேர்க்க வேண்டும். இந்த இயக்கம் கட்சியாக மாறும். ஆனந்தமாக அரசியல் இயக்கத்தை தொடங்குகிறேன். நம் கட்சியில் நிரந்தரத் தலைவர், நிரந்தர எம்.பி, எம்.எல்.ஏ. கிடையாது. இணைபவர்களுக்கு அரசியல் தொடர்பான பயிற்சி தரப்படும், அமைப்பை உருவாக்கி கட்சியாக மாறுவோம். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

அண்ணாமலை தொடங்கிய இயக்கம்

இது நம்ம இயக்கம் (we the leaders) என்ற பெயரில் அண்ணாமலை தொடங்கியுள்ள இயக்கத்தில் உறுப்பினர் சேர்க்கை ஜரூராக நடக்கிறது. தற்போது வரை 3 லட்சத்துக்கும் அதிகமானோர் இணைந்துள்ளனர்



## டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மெட்ரிக் பள்ளி திறப்பு விழா! முன்னாள் சபாநாயகர் அப்பாவு, முன்னாள் அமைச்சர் பங்கேற்பு!

திசையன்விளை, ஜூன்.6-
திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள நவ்வலடியில், திருநெல்வேலி தக்ஷிண மாற நாடார் சங்கத்திற்குப் பாத்தியப்பட்ட "டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி" புதிய கட்டடத் திறப்பு விழா மிக விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் சபாநாயகர் மு. அப்பாவு, முன்னாள் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் சதீஷ் கிறிஸ்டோபர் ஆகியோர் கலந்துகொண்டு, புதிய பள்ளி வளாகத்தை முறைப்படி திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினர்.
இந்நிகழ்ச்சிக்குத் திருநெல்வேலி தக்ஷிண மாற நாடார் சங்கத் தலைவர் ஆர்.கே. காளிதாசன் நாடார் தலைமை தாங்கினார். சங்கத்தின் செயலாளர் ராஜகுமார் நாடார், பொருளாளர் செல்வராஜ் நாடார் மற்றும் நவ்வலடி பஞ்சாயத்து தலைவர் ராதிகா சரவணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்பகுதி மாணவ, மாணவிகளின் உயர்தரக் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் துவங்கப்பட்டுள்ள இப்பள்ளியின் திறப்பு விழாவில், நாடார் சங்க நிர்வாகிகள், கல்வி நிறுவனப் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## "போதைக்கு நோ...பாசூர் அரசுப் பள்ளியில் மாணவச் செல்வங்களின் அதிரடி உறுதிமொழி!

கொடுமுடி, ஜூன்.6-
ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் பாசூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், பள்ளி மாணவ, மாணவிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு "போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு" நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்குப் பள்ளியின் தலைமை ஆசிரியை வ. தேவகியம்மாள் தலைமை தாங்கி, மாணவர்களிடையே ஒழுக்கத்தின் அவசியத்தைப் பற்றி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக மலையம்பாளையம் காவல் ஆய்வாளர் சு. வினோதினி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் மு. பாலசுப்பிரமணி ஆகியோர் நேரில் கலந்துகொண்டனர். அப்போது அவர்கள், தற்காலத்தில் பெருகி வரும் போதைப்பொருள் பயன்பாட்டினால் இளைய சமுதாயத்திற்கு ஏற்படும் உடல்நலக் குறைபாடுகள், மன உளைச்சல்கள் மற்றும் அதன் மூலம் ஏற்படும் கடுமையான சட்ட ரீதியான பாதிப்புகள் குறித்து மாணவ, மாணவிகளுக்கு மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கம் அளித்தனர்.
காவல்துறையினரின் இந்த ஆழமான விழிப்புணர்வு உரையைத் தொடர்ந்து, "நாங்கள் எங்கள் வாழ்நாளில் ஒருபோதும் போதைப்பொருட்களைப் பயன்படுத்த மாட்டோம்; மற்றவர்களையும் பயன்படுத்த விடாமல் தடுப்போம்" என்று பள்ளி மாணவ, மாணவிகள் அனைவரும் கைகளை உயர்த்தி ஒட்டுமொத்தமாக உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

## "அமெரிக்கா, இஸ்ரேலுக்கு ஈரான் தீர்க்கமான அடியை கொடுத்துள்ளது" உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி

தெஹ்ரான், ஜூன்.6-
தீய எதிரிகளான அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் ஈரான் தீர்க்கமான அடியை கொடுத்துள்ளதாக அந்நாட்டின் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி தெரிவித்துள்ளார்.



ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியின் நிறுவனர் அயதுல்லா ருஹோல்லா கோமேனியின் 37வது நினைவு நாளையொட்டி மொஜ்தபா கமேனி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கை, அயதுல்லா ருஹோல்லா கோமேனியின் நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத போதகரால் வாசிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து, இந்த அறிக்கை மொஜ்தபா கமேனியின் எக்ஸ் பக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர், "அமெரிக்காவின் தலைமையில் இயங்கும் ஏகாதிபத்திய சக்திகள் கடந்த 80 ஆண்டுகளாக இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு ராணுவ தளத்தை உருவாக்கியுள்ளன. போலியானதும், சட்டவிரோதமானதுமான அந்த இஸ்ரேலின் கிழக்கே, வலிமையான, சுதந்திரமான ஈரான் எனும் தேசம் இருப்பதை ஏற்க மறுக்கிறது. ஈரானின் முன்னேற்றத்தை தடுப்பதற்காக ஏகாதிபத்திய சக்திகள் எதையும் செய்ய தயாராக உள்ளன. அந்த தீய எதிரி, ஈரானின் ஆயுதப்படை வீரர்களுடனான நேரடி மோதலில் தோல்வியைச் சந்தித்துள்ளது. ராணுவ ரீதியிலான போர்க்களங்களிலும் சரி, ஈரானின் தெருக்களிலும் சரி அது ஒரு தீர்க்கமான அடியை வாங்கி இருப்பதால் தற்போது அவமானத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அந்த எதிரி, இரண்டு முக்கிய அம்சங்கள் மீது தனது சதித் திட்டத்தை தீட்டி வருகிறது. ஒன்று, ஈரான் மக்களின் மனவுறுதியை சிதைப்பது. மற்றொன்று, நாட்டின் அதிகாரிகளின் முடிவெடுக்கும் திறனில் பாதிப்பை ஏற்படுத்துவது. இதற்காகவே, சந்தேகம், விரக்தி, அச்சம், அவநம்பிக்கை, பிளவு ஆகியவற்றின் விதைகளை அவர்கள் விதைக்கிறார்கள். எதிரியின்தீய நோக்கங்களை உணர்ந்து நாட்டு மக்கள் அனைவரும் அந்த சதித்திட்டத்தை தகர்த்தெறிய வேண்டும்" என தெரிவித்துள்ளார்.
முன்னதாக, அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஈரான் மறுத்ததால் அந்நாட்டின் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இதில் ஈரானின் ராணுவத் தளங்கள் பல சேதம் அடைந்தன. இந்நிலையில் இரு நாடுகள் இடையே கடந்த ஏப்ரல் மாதம் போர் நிறுத்தம் ஏற்பட்டது. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க ஈரான் முன்வராததால், போர் நிறுத்தம் ஏற்படாமல் இருந்தது. தற்போது மீண்டும் போர்ச் சூழல் வலுத்துள்ளது கவனிக்கத்தக்கது.

## "அமைச்சரைச் சந்தித்த அரசு அலுவலர் ஒன்றியம்!" நிதித்துறை அமைச்சர் மரியவில்சனிடம் குவிந்த கோரிக்கைகள்!



சென்னை, ஜூன்.6-
தமிழ்நாடு நிதித்துறை அமைச்சர் மரியவில்சன் அவர்களை, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் நிர்வாகிகள் மாநிலத் தலைவர் மகேந்திரகுமார் தலைமையில் நேரில் சந்தித்து மரியாதை நிமித்தமாகப் பேசினர். இச்சந்திப்பின் போது, தமிழ்நாடு அரசில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நிலை பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் குறித்தும், நிதி நிர்வாக மேம்பாடு குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், சங்கத்தின் சார்பில் அமைச்சருக்குப் புத்தகம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. அரசு ஊழியர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த நிதித்துறை அமைச்சர் மரியவில்சன், "இந்தக் கோரிக்கைகளை முன்னும் பின்னுமாக (ஒவ்வொன்றாக) நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் திட்டவட்டமாக உறுதியளித்துள்ளார். இந்நிகழ்வில் ஒன்றியத்தின் திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் அமாவாசை, திருச்சி மாவட்டப் பொருளாளர் ஆனந்த், ஸ்ரீரங்கம் வட்டக்கிளைச் செயலாளர் சுரேஷ், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அலுவலர்கள் சங்கத்தின் நிர்வாகி ஜெகதீஸ்வரன், நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கண்ணம்மா, சத்துணவு பணியாளர் ஒன்றியத்தின் முன்னாள் நிர்வாகிகள் ராஜா மற்றும் சோமு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## "14 வகையான கல்வி உபகரணங்கள் விநியோகம்!" அரசுப் பள்ளியில் எம்.எல்.ஏ கருப்பையா வழங்கி உத்வேகம்!

வாடிப்பட்டி, ஜூன்.6-
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம் தெ.மேட்டுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசு சார்பாக மாணவ மாணவிகளுக்கு விலையில்லா கல்வி உபகரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடந்தது.இந்த நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் குரும்பன் தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியர் தீபா முன்னிலை வகித்தார். தமிழ் ஆசிரியர் ஞானமணி வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா பள்ளி சீருடை, காலனி, நோட்டு, புத்தகம், பேனா, பை, ஜாமென்ட்ரி பாக்ஸ் உள்ளிட்ட 14 வகையான கல்வி உபகரண பொருட்கள் வழங்கினார்.இதில் தமிழக வெற்றிக் கழகத்தின் அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர்கள் விஜய்ஹரிஷ், கிருஷ்ணமூர்த்தி, வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் தாமு, வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்திக், இணைச் செயலாளர்முத்து, பேரூர் செயலாளர்புகழ், மற்றும் நிர்வாகிகள் தியாகு, ராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியை தமிழாசிரியர் கவிதா தொகுத்து வழங்கினார். முடிவில் உடற்கல்வி ஆசிரியர் ராஜன் நன்றி கூறினார்.




## அல்அமீன் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தின விழா!" தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் வனத்துறை சார்பில் பசுமைப் புரட்சி!

மதுரை, ஜூன்.6-
தமிழ்நாடு அறிவியல் இயக்கம், தமிழ்நாடு வனத்துறை மற்றும் மதுரை கே.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளி ஆகியவை இணைந்து நடத்திய "உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா" பள்ளி வளாகத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் பேராசிரியர் அந்தோணி பால் தலைமையுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார். விழாவில், தமிழ்நாடு அறிவியல் இயக்க மேனாள் மாவட்டத் தலைவர் பேராசிரியர் ராஜேஷ் அவர்கள், "சுற்றுச்சூழல் பாதுகாப்பும், காலநிலை மாற்றமும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் உலகப் பருவநிலை மாற்றம், மரம் வளர்ப்பின் அவசியம், உணவுச் சங்கிலி முக்கியத்துவம், புவி வெப்பமயமாதலால் ஏற்படும் விளைவுகள் மற்றும் பசுமை இல்ல வாயுக்களின் தன்மைகள் குறித்து ஆழமான கருத்துக்களை மாணவர்களிடையே விளக்கிக் கூறினார்.அல் அமீன் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஷேக் நபி சிறப்புரையாற்றினார். வனச்சரக அலுவலர் வெனிஷ் பள்ளிக்குத் தேவையான மரக்கன்றுகளை வழங்கினார். இவ்விழாவில் முன்னாள் பேராசிரியர் எழில், தமிழ்நாடு அறிவியல் இயக்க உறுப்பினர் வரதராசன், துளிர் இல்ல ஒருங்கிணைப்பாளர் காமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியைத் தமிழாசிரியர் தௌபிக் ராஜா சுவாரசியமாகத் தொகுத்து வழங்க, உதவித் தலைமை ஆசிரியர்கள் முகமது ரபி மற்றும் அல்ஹாஜ் முகமது ஆகியோர் விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## சென்னை அம்பத்தூரில் 1,750 கிலோ குட்கா பறிமுதல் இருவர் கைது

சென்னை, ஜூன்.6-
சென்னை ஆவடி காவல் நிலையத்துக்கு உட்பட்ட அம்பத்தூர் எஸ்டேட் பகுதியில் மதுவிலக்கு அமலாக்க காவல் துறையினர் மற்றும் அம்பத்தூர் எஸ்டேட் காவல் துறையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர்.சோதனையின் போது அவ்வழியே வந்த கண்டைனர் வாகனத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 1,750 கிலோ குட்கா பொருட்கள் இருந்தது கண்டுப்பிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து காவல்துறையினர் 1,750 கிலோ குட்கா பொருட்களை பறிமுதல் செய்தனர். மேலும் அந்த வாகனத்தை ஒட்டி வந்த ஓட்டுநர் மற்றும் குட்கா கடத்தலுக்கு முக்கிய காரணமாக இருந்த நபரையும் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.இதுகுறித்து ஆவடி காவல் ஆணையர் மற்றும் செங்குன்றம் துணை ஆணையர் நேரில் வந்து விசாரணை மேற்கொள்ள உள்ளனர். கண்டைனர் வாகனத்தில் கொண்டுவரப்பட்ட இந்த 1,750 கிலோ குட்கா எங்கிருந்து கொண்டுவரப்பட்டது, இதில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



## சட்டமன்றத்தில் ஒலிக்குமா குறிஞ்சியர் பேரவையின் குரல்? தவெக எம்.எல்.ஏ ஆனந்த் மோகன்உறுதி!

ஈரோடு, ஜூன்.6-
தமிழக வெற்றி கழகத்தின் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன் விலிகி அவர்களை, குறிஞ்சியர் முன்னேற்ற பேரவையின் மாநிலத் தலைவர் குறிஞ்சி ப. சந்திரசேகரன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்துப் பேசினார்.ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, குறிஞ்சியர் முன்னேற்ற பேரவையின் மாநிலத் தலைவர், சட்டமன்ற உறுப்பினருக்குச் சால்வை அணிவித்துத் தனது வாழ்த்துகளையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டார். அதன் தொடர்ச்சியாக, ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சமுதாய மக்களின் பல்வேறு நீண்ட நாள் கோரிக்கைகள் மற்றும் அத்தியாவசியத் தேவைகள் அடங்கிய மனுவினை அவரிடம் வழங்கினார்.
குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை தரப்பில் முன்வைக்கப்பட்ட சமுதாய மக்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் கனிவுடன் கேட்டறிந்த தவெக சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன், "இந்தக் கோரிக்கைகள் குறித்துக் கண்டிப்பாகத் தமிழக சட்டமன்றத்திலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமும் நேரில் தெரிவித்து உரிய விடிவுகாலம் ஏற்படுத்தித் தருவேன்" எனத் திட்டவட்டமாக உறுதியளித்துள்ளார்.

## 152 மருத்துவ படிப்பு இடங்களை சரண்டர் செய்வதை தடுக்க தவெக அரசுக்கு மார்க்சிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.6-
தமிழகத்தில் உள்ள அரசுப் பணி மருத்துவர்கள் உயர் சிறப்பு மருத்துவப் படிப்புக்குரிய இடங்களில் சேருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தவெக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.
இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி என அழைக்கப்படும் 'உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு'களுக்கான 152 காலி இடங்களை அகில இந்திய தொகுப்புக்கு மாற்ற வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.



2025ம் ஆண்டு நீட் தேர்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 430 சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ இடங்களுக்கு நடைபெற்ற கலந்தாய்வில் உள்ள 215 இடங்கள் பணியில் உள்ள அரசு மருத்துவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இந்த இடங்களில் 63 இடங்கள் மட்டுமே கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு, இரண்டாவது கட்ட கலந்தாய்வு முடிவடைந்த நிலையில், 152 இடங்கள் காலியாக இருந்தன. இது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் மேற்கண்ட 152 இடங்கள் அகில இந்திய தொகுப்புக்கு சரண்டர் செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இது தமிழகத்தின் உரிமையை பறிப்பது மட்டுமின்றி, கிராமப் புறங்களிலும், மலைப் பகுதிகளிலும், பல்வேறு அரசு மருத்துவமனைகளிலும் பணிபுரியும் அரசு மருத்துவர்களின் உயர் படிப்பு கனவு பறிபோகும். தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கட்டமைப்புக்கும், கிராமப்புற மக்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்டுகிறது.
எனவே, தமிழக அரசு இப்பிரச்சனையின் அவசரத் தன்மையை கருத்தில் கொண்டு, உச்ச நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை முன்வைத்து 152 உயர் சிறப்பு மருத்துவ படிப்பு இடங்களும் அகில இந்திய தொகுப்புக்கு சரண்டர் செய்யப்படுவதை தடுத்திடவும், தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பணி மருத்துவர்கள் உயர் சிறப்பு மருத்துவப் படிப்பிற்குரிய இடங்களில் சேருவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது" என்று பெ.சண்முகம் கூறியுள்ளார்.

# பிஹார் மருத்துவமனை தீ விபத்தில் 5 பேர் உயிரிழப்பு



முசாபர்பூர், ஜூன்.6-
பிஹாரில் ஒரு தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.பிஹாரின் முசாபர்பூர் மாவட்டம், பிரம்மபுரா பகுதியில் பிரசாத் மருத்துவமனை இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் நேற்று அதிகாலை 3 மணியளவில் தீப்பற்றியது. தீ வேகமாகப் பரவியதுடன் அறை முழுவதும் அடர்ந்த புகையும் நிறைந்தது.இந்நிலையில் இந்த தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயம் அடைந்தனர். இவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முசாபர்பூர் மாநகராட்சி ஆணையர் ரிதுராஜ் சிங் கூறுகையில், "மின் கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கருதுகிறோம். என்றாலும் விரிவான விசாரணைக்குப் பின்னரே துல்லியமான காரணம் தெரியவரும். தீ விபத்து குறித்து விசாரணை நடத்த 5 பேர் கொண்ட குழுவை மாவட்ட ஆட்சியர் அமைத்துள்ளார்" என்றார். பிஹார் முதல்வர் சாம்ராட் சௌத்ரி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், "இந்த விபத்து மிகுந்த துயரம் அளிக்கிறது. இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறேன். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக தலா ரூ.4 லட்சம் நிதியுதவி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு மாவட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று கூறியுள்ளார். துணை முதல்வர் விஜய் குமார் சவுத்ரி, பாஜக தேசிய தலைவர் நிதின் நவீன், முன்னாள் முதல்வர் நிதிஷ் குமார் உள்ளிட்ட தலைவர்களும் விபத்து குறித்த மிகுந்த வேதனை தெரிவித்துள்ளனர்.

# மீன்பிடி படகுகளுக்கு டீசல் மானியம் கோரி மத்திய அரசுக்கு புதுச்சேரி முதல்வர் கடிதம்



புதுச்சேரி, ஜூன்.06–
இந்தியாவில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலத்தில் மீன் வளத்தைப் பாதுகாக்க ஆண்டுதோறும் 61 நாட்கள் தடை விதிக்கப்படுகிறது. புதுச்சேரியில் இந்தத் தடை வரும் ஜூன் 14ம் தேதியுடன் முடிகிறது. இப்போது புதுச்சேரியில் மீன்பிடி விசைப் படகுகளுக்கு புதுச்சேரி கூட்டுறவு பங்குகள் வாயிலாக டீசல் வழங்கப்பட்டு வருகிறது.

நாடு முழுவதும் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மீன்பிடித் தடைக்காலம் முடிவுக்கு வருகிறது. இச்சூழலில் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

அதில், "புதுச்சேரியின் முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்று கடல் மீன்பிடித் தொழில். புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகிய பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வாழ்வாதாரத்தை வழங்கு கிறது. இங்கு சுமார் 450 இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள் இருக்கின்றன. இந்தப் படகுகளுக்கு எரிபொருள் தேவைகளை புதுச்சேரி மாநில மீனவர் கூட்டுறவு சங்கம் பூர்த்தி செய்கிறது.

புதுச்சேரி தேங்காய்த் திட்டு மீன்பிடித் துறைமுகம் மற்றும் ஏனாமில் உள்ள சாவித்திரி நகர் மீன்பிடித் துறைமுகம் ஆகிய இடங்களில் இந்தச் சங்கம் டீசல் விற்பனை நிலையங்களை இயக்குகிறது. பதிவு செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளுக்கு டீசல் வழங்குவதற்காக மட்டுமே நிறுவப்பட்டுள்ளன. இந்த விற்பனை நிலையங்கள் ஆண்டுதோறும் சுமார் 50 லட்சம் லிட்டர் டீசலை விநியோகம் செய்கின்றன.

மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல் களைக் கருத்தில் கொண்டு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு இணையான விலையில் டீசல் வழங்கும் ஒரு சிறப்பு ஏற்பாட்டை நீட்டித்தது. இது மார்ச் 2026 வரை அமலில் இருந்தது. சமீபத்தில் டீசல் விலையில் செய்யப்பட்ட திருத்தத்தைத் தொடர்ந்து, மொத்த நுகர்வோர் விலைகளுக்கும் சில்லறை விற்பனை நிலைய விலைகளுக்கும் இடையிலான வேறுபாடு கணிசமாக அதிகரித்துள்ளது.

இது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக் கப்பல்களின் செயல்பாட்டுச் செல வுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளது. மீன்பிடிச் செலவினங்களில் எரிபொருளே மிகப்பெரிய அங்கமாக உள்ளது. தற்போ தைய விலை வேறுபாடு, மீன்பிடி நடவடிக்கைகளின் பொருளாதார சாத்தியக் கூறுகளைப் பாதித்துள்ளது.

மீனவர்கள் எதிர்கொள்ளும் குறைந்து வரும் லாபம், ஏற்ற இறக்கமான மீன்பிடி அளவு மற்றும் அதிகரித்து வரும் உள்ளீட்டுச் செலவுகள் ஆகியவற்றின் பின்னணியில் இந்தச் சுமை குறிப்பாகக் கடுமையாக உள்ளது. எனவே, மீனவர் கூட்டுறவு கூட்டமைப் புக்கான டீசல் தற்போதைய சில்லறை விற்பனை நிலைய விலைகளுக்குச் சமமான விலையில் வழங்க வேண்டும். மாற்றாக, பொருத்தமான சிறப்பு விலை நிர்ணய முறை அல்லது மானிய ஏற்பாடு அளிக்க பரிசீலிக்க வேண்டும்" என்று முதல்வர் ரங்கசாமி மத்திய அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



# தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் ஜூன் 18ல் தொடக்கம்

சென்னை, ஜூன்.6-
தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் ஜூன் 18ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் விஜய் தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்துவரும் நிலையில், இதுவரை 3 முறை அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் இன்று காலை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.
இந்நிலையில், சட்டப்பேரவை செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம், 2026 ஆம் ஆண்டு, ஜூன் 18ம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடும். அச்சமயம் தமிழ்நாடு ஆளுநர் உரை நிகழ்த்த உள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.
முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் இதுவாகும். 202627ம் நிதியாண்டுக்கான புதியஅரசின் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

# ஆமை வேகத்தில் சென்னை 2 ஆம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள்: மக்கள் அதிருப்தி



சென்னை, ஜூன்.6-
த.வெ.க அரசு பொறுப்பேற்ற பின் பூந்தமல்லி, வடபழனி இடையே ரயில் சேவையை தொடங்குவதில் காலதாமதம் ஆவதால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். சென்னையில் 2 ஆம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ. 63.246 கோடி மதிப்பில் 116 கிலோ மீட்டர் தொலைவில் மூன்று வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி மாதவரம் சிறுசேரி வரை 3வது வழித்தடத்திலும், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரை 4வது வழித்தடத்திலும், மாதவரம்
சோழிங்கநல்லூர் வரை 5 வது வழித்தடத்திலும் பணிகள் நடைபெறுகின்றன. மொத்தம்118 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்க திட்டமிட்டு, பணிகள் நடைபெறுகின்றன. கடந்ததி.மு.க. ஆட்சியில் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் வேகமாக நடைபெற்று வந்தன. ஆனால், த.வெ.க ஆட்சி அமைந்த பிறகு மெட்ரோ ரயில் திட்டங்கள் ஆமை வேகத்தில் நடைபெறுகிறது. தேர்தலுக்காக வடமாநிலங்களுக்கு சென்றவர்கள் குறைந்த அளவே பணிக்கு திரும்பியதால் விறுவிறுப்புடன் நடைபெற்று வந்த மெட்ரோ பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் ஒட்டு மொத்தமாக, ஏப்ரல் வரை 52% சதவீதம் மெட்ரோ பாதை அமைக்கும் பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளது. குறிப்பிட்ட காலத்தில் மெட்ரோ ரயில் சேவையை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதே போன்று பூந்தமல்லி முதல் போரூர், வடபழனி தடத்தில் பணிகள் நிறைவடைந்து 5 மாதங்கள் ஆகியும் ரயில்சேவை தொடங்காததால் பயணிகள் சிரமம் அடைந்துள்ளனர்




# உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க 6 குழு அமைப்பு: இறக்குமதியை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை

புதுடெல்லி. ஜூன்.6-
நாட்டின் இறக்குமதி அளவை குறைத்து, உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு சுமார் 100 தயாரிப்புகளைக் கண்டறிய, துறை சார்ந்த 6 குழுக்களை மத்திய அசு அமைத்துள்ளது.
இது குறித்து மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறியதாவது: உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க இந்த 6 செயல்பாட்டு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை உள்நாட்டில் தயாரிக்க வேண்டிய பொருட்களின் பட்டியல் குறித்து விவாதிக்கும். இந்த பட்டியல் 3 வாரங்களுக்குள் மத்திய அமைச்சரவை செயலகத்திடம் வழங்கப்படும். மருந்துகள், பயோ டெக் மற்றும் மருத்துவ உபகரணங்கள், ரசாயனங்கள் மற்றும் பெட்ரோ கெமிக்கல்கள், ஜவுளி மற்றும் காலணிகள், மூலதனப் பொருட்கள், வாகனங்கள் மற்றும் மின்சார வாகனங்கள், மேம்பட்ட மூலதனப் பொருட்கள், கட்டுமான உபகரணங்கள் மற்றும் உள் கட்டமைப்பு, பாதுகாப்பு மற்றும் விண்வெளி மற்றும் மின்னணுவியல் ஆகியவற்றில் தயாரிக்க வேண்டிய பொருட்கள் குறித்து இந்த குழுக்கள் ஆராயும்.
இந்தக் குழுக்களின் உறுப்பினர்கள் வர்த்தகம், நிதி ஆயோக், மருந்துகள், பொருளாதார விவகாரங்கள், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், ரசாயனங்கள், ஜவுளி, கனரக தொழில், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பம், சாலைப் போக்கு வரத்து, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.
இந்தக் குழுக்களுக்கு தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் செயலாளர் தலைமை தாங்குவார். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படாத அல்லது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான அளவில் உற்பத்தி செய்யப்படாத தயாரிப்புகளை இந்தக் குழுக்கள் கண்டறியும். உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகள் இரண்டுக்குமான உற்பத்தியை விரிவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

# "மோடி எனது நல்ல நண்பர்... விரைவில் இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம்" ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூன்.6-
பிரதமர் நரேந்திர மோடி தனது நல்ல நண்பர் என்றும், இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் விரைவில் ஏற்படும் என்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்டு ட்ரம்ப், "பல ஆண்டுகளாக அமெரிக்காவை இந்தியா சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது. அமெரிக்க பொருட்கள் மீது இந்தியா அதிக இறக்குமதி வரிகளை விதித்தது. ஆனால், அமெரிக்கா பதிலுக்கு எதையும் செய்யவில்லை. நிலைமை இப்போது தலைகீழாக மாறியுள்ளது. இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதன் மூலம் தற்போது நாங்கள் அதிக பணம் சம்பாதிக்கிறோம். இந்தியாவுடன் நாங்கள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவோம். ஏனெனில் உங்கள் பிரதமரை எனக்குப் பிடிக்கும்.ரு காலத்தில், தனது இரு சக்கர வாகனங்களை இந்தியாவுக்குள் விற்க முடியாத நிலையை புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனமான ஹார்லி டேவிட்சன் எதிர்கொண்டது. ஏனெனில், இந்தியா 200% இறக்குமதி வரியை விதித்தது. இதனால், ஹார்லி டேவிட்சன் நிறுவனத்தால் சந்தையில் நுழைய முடியவில்லை. இதன் காரணமாக அந்த நிறுவனம் இந்தியாவுக்குள் தனது தொழிற்சாலையை அமைத்தது. அப்படி நடந்தது துரதிருஷ்டவசமானது. ஆனால் அது எனது ஆட்சிக்காலத்தில் நடக்கவில்லை. அதற்கு முன்பாக நடந்தது. அதே நேரத்தில் இந்திய நிறுவனங்கள், அமெரிக்காவில் மோட்டார் சைக்கிள்களை விற்றன. அதற்கு நாங்கள் எந்த இறக்குமதி வரியையும் விதிக்கவில்லை" என ட்ரம்ப் தெரிவித்தார்.

# கும்பகோணம் திருவிடைமருதூர் அருகே கிணறு வெட்டும் பணியின்போது மண் சரிந்து விழுந்து விபத்து



கும்பகோணம், ஜூன்.6-
கும்பகோணம் திருவிடைமருதூர் அருகே கிணறு வெட்டும் பணியின்போது மண் சரிந்து விழுந்து விபத்துகுள்ளானது. கிணறு வெட்டும்போது மண் சரிந்து விழுந்ததில் தொழிலாளி பாலு என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மண் சரிவில் சிக்கி பாலு உயிரிழந்த நிலையில், மற்றொரு தொழிலாளி மருதவாணன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்

# டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி பெண்கள் முற்றுகை போராட்டம்!

திருச்சி, ஜூன்.6-
மணப்பாறை அருகே வீரப்பூர் பூசாரிப்பட்டியில் டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி பெண்கள் முற்றுகை போராட்டம் நடத்தி வருகின்றனர். பூசாரிப்பட்டியில் பொன்னர் சங்கர் கோயிலுக்கு அருகே உள்ள டாஸ்மாக் கடையை அகற்றவில்லை என மக்கள் புகார். டாஸ்மாக்கை அகற்ற பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என கிராம மக்கள் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர்

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 17 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு




சென்னை, ஜூன்.6-
தமிழகத்தில் கோவை, நீலகிரி, தேனி உள்ளிட்ட 17 மாவட்டங்களில் (ஜூன் 6) ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.
இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலோர கர்நாடகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கிமீ முதல் 4.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.தென்மேற்கு பருவமழை, தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு அரபிக்கடலின் மீதமுள்ள பகுதிகளிலும், மத்திய மேற்கு மற்றும் மத்திய கிழக்கு அரபிக்கடலின் சில பகுதிகளிலும், லட்சத்தீவு பகுதிகளிலும், கேரளா கர்நாடகம் மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளிலும், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும், மேலும் தென்மேற்கு, மத்திய மேற்கு, மத்திய கிழக்கு மற்றும் வடகிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும் முன்னேறியுள்ளது.இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 6) கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிகக் கனமழையும், தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பூர், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழையும் பெய்யக்கூடும்.7ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிகக் கனமழையும், தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (ஜூன் 6) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று மணிக்கு 40 முதல் 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக்காற்று வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கில் 17 செ.மீ, ஊத்தில் 15 செ.மீ, காக்காச்சியில் 12 செ.மீ, மாஞ்சோலையில் 10 செ.மீ, கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, பாலமோரில் தலா 6 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

# தமிழகம் முழுவதும் 46 சார்பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி சோதனை ₹37 லட்சம் பறிமுதல்!

சென்னை, ஜூன்.6-
பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் நிலத்தின் ஏக்கர் மற்றும் கட்டுமானத்தின் பரப்பளவிற்குத் தகுந்தாற்போல், ஆயிரக்கணக்கிலும் லட்சக்கணக்கிலும் சார்பதிவாளர்கள் கட்டாய லஞ்சம் கேட்பதாக எழுந்த அடுக்கடுக்கான புகார்களின் பேரில், தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) அதிரடி சோதனையில் இறங்கியுள்ளது."தற்போது அமைச்சர் தரப்புக்குப் பத்திரப்பதிவுக்காகத் தனியாக எவ்விதப் பணமும் தர வேண்டியதில்லை" என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், பல்வேறு மாவட்டங்களில் உள்ள சார்பதிவாளர்கள் ஆவணப் பதிவுக்குத் தொடர்ந்து லஞ்சம் வாங்கி வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு வந்த ஏராளமான புகார்களைத் தொடர்ந்து, சந்தேகத் திற்குரிய அனைத்து அலுவலகங்களிலும் திடீர் சோதனை மேற்கொள்ளத் தமிழக அரசு அதிரடியாக அனுமதி வழங்கியது. அதன் அடிப்படையில், முதற்கட்டமாகத் தமிழகம் முழுவதும் உள்ள 60 சார்பதிவாளர் அலுவலகங்களில் புகாருக்குள்ளான இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையைத் தொடங்கினர். இதுவரை 46 சார்பதிவாளர் அலுவலகங்களில் நடத்தப்பட்ட தீவிர சோதனையில், கணக்கில் வராத சுமார் 37 லட்சம் ரூபாய் ரொக்கப் பணம்பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.சேலம் கிழக்கு: ₹3 லட்சம், விருகம்பாக்கம் - ஓட்டப்பிடாரம்: தலா ₹2 லட்சம், செம்பியம்: ₹1.48 லட்சம், கொன்னூர்: ₹84,000. இவை தவிர மற்ற அலுவலகங்களிலும் கணக்கில் வராத பல லட்ச ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



# பொதுமக்கள் தாகம் தீர்க்க களமிறங்கிய தவெக! மக்கள் சேவையில் வேகம் காட்டும் நிர்வாகிகள்!

புளியங்குடி, ஜூன்.6-
தென்காசி மாவட்டம் புளியங்குடியில், தமிழக வெற்றி கழகம் (தவெக) சார்பில் கோடைகால வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு இலவச நீர்மோர் பந்தல் வழங்கும் அலாதியான நிகழ்ச்சி இன்று மிகச் சிறப்பாகத் தொடங்கப்பட்டது.
புளியங்குடி பேருந்து நிலையம் மற்றும் டி.என்.புதுக்குடி காமராஜர் சிலை அருகில் உள்ளிட்ட இரண்டு முக்கிய இடங்களில் இந்த நீர்மோர் பந்தல்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிக்குத் தவெக தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் மாரியப்பன், நகரச் செயலாளர் வெங்கடேஷ், மற்றும் இளைஞர் அணி செயலாளர் சுரேஷ் ஆகியோர் கூட்டாகத் தலைமை தாங்கி, பொதுமக்களுக்கு நீர்மோர், தர்பூசணி மற்றும் நொங்கு உள்ளிட்ட கோடைகாலப் பழங்களை அள்ளி வழங்கி இப்பணியைத் துவக்கி வைத்தனர்.இம்மாபெரும் மக்கள் நல நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஜான்சன், சௌந்தரபாண்டியன் மற்றும் தெற்கு நகரச் செயலாளர் ஷிகூஷிவி கண்ணன் ஆகியோர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர். இத்திறப்பு விழாவில் தவெக மாவட்ட, சார்பு அணி, நகர, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உட்பட அப்பகுதி பொதுமக்கள் ஏராளமானோர் திரளாகக் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

# “சொத்து எங்கிருந்து வந்தது?” அண்ணாமலை மீது சிபிஐ, அமலாக்கத்துறை விசாரணை கோரி திருப்பூரில் அதிரடி பேட்டி!

திருப்பூர், ஜூன்.6-
"தற்போது கட்சியில் பதவி இல்லாத காரணத்தினால், பாரதிய ஜனதா கட்சி குறித்துக் குறை கூறுவது ஏற்புடையது அல்ல" என்று இந்து முன்னேற்ற கழக மாநில தலைவர் கோபிநாத் திருப்பூரில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.அவர் பேசுகையில், "அண்ணாமலை ஐ.பி.எஸ் பணியையே முறையாகச் செய்யவில்லை; கர்நாடகாவில் இவரை யாருக்கும் தெரியாது. சீனியர்கள் இருந்தும் படிப்புக்கு மரியாதை தந்து மாநில தலைவர் பதவி வழங்கப்பட்டது. ஆனால், கூட்டணி கட்சிகளை



அரவணைக்கத் தவறி, இறந்த தலைவர்கள் குறித்துப் பேசியதாலேயே அதிமுகவுடன் பிரச்சினை எழுந்தது. தற்போது சுயநலத்திற்காகப் பிரிந்து தனிக்கட்சி தொடங்கும் அண்ணாமலை பல முறைகேடுகள் செய்துள்ளார். மத்திய அரசு அவர் மீது ஈடி (ED) சோதனை மற்றும் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும். அவரது சொத்துக்கள் எங்கிருந்து வந்தது என ஆராய வேண்டும்" என்றார்.
மேலும், நடிகர் விஜய்க்குப் பிறகு இப்போது எல்லோருக்கும் 'முதல்வன்' படம் போல சி.எம் ஆக வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. தமிழக இளைஞர்கள் மாயையை நோக்கிச் செல்லக் கூடாது. எத்தனை பேர் வந்தாலும் போனாலும் சாதாரணக் காற்று பாஜக என்ற ஆலமரத்தை அசைக்க முடியாது என்று மிகக் காரசாரமாகக் குறிப்பிட்டார்.



# பணநாயகம் தோற்கடிக்கப்பட்டது... இது ஜனநாயக புரட்சி!” திருப்பூரில் மதிமுக அர்ஜூனராஜ் அதிரடி பேட்டி!

திருப்பூர், ஜூன்.6-
திமுக அணுகுமுறை சரியில்லை என்பதே தொண்டர்கள் கருத்தாக உள்ளது. மதிமுக அவைத்தலைவர் அர்ஜூனராஜ் பேட்டி. தமிழகத்தில் ஜனநாயக புரட்சி ஏற்பட்டுள்ளது. பணநாயகம் தோற்கடிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆட்சி 5 ஆண்டு ஆட்சி செய்ய வேண்டும் என மதிமுக விரும்புகிறது. மதிமுக இனி தங்கள் சின்னத்தில் தான் போட்டியிடுவோம். தேர்தல் சமயத்தில் கூட்டணி குறித்து முடிவு செய்வோம். எத்தனையோ ஜாம்பவான்கள் போனாலும் இன்றும் மதிமுக உண்மை தொண்டர்கள் எங்களோடு உள்ளார்கள். திமுக அணுகுமுறை சரியில்லை என தொண்டர்கள் கருத்து உள்ளது என தெரிவித்தார்.

# சின்னச் சருகல்தான்... மீண்டும் எடப்பாடியார் ஆட்சி நிச்சயம்!” உடுமலை ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் எம்பி சிவசாமி

உடுமலை, ஜூன்.6-
அஇஅதிமுக பொதுச்செயலாளரும் முன்னாள் தமிழக முதல்வருமான எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் புறநகர் மாவட்ட அஇஅதிமுக உடுமலை நகர கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் உடுமலை நகரம் தேஜஸ் மஹாலில் நேற்று (04.06.2026) மாலை உணர்வுப்பூர்வமாக நடைபெற்றது.உடுமலை நகர கழக அவைத்தலைவர் சாமி (எ) சிவராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, திருப்பூர் புறநகர் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திருப்பூர் சிவசாமி முன்னிலை வகித்தார்.
இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் சிவசாமி அவர்கள் தொண்டர்கள் மத்தியில்




எழுச்சியுரையாற்றுகையில், "அஇஅதிமுக கழகத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ளது சற்று சின்ன சருகல்தான்; மீண்டும் கழகக் காவல் தெய்வம் எடப்பாடியார் தலைமையில் தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சி மலரும், அவர் மீண்டும் முதல்வராக வருவார்" என அதிரடியாகச் சூளுரைத்தார். இதன் தொடர்ச்சியாக, கழகத்தை அடிமட்ட அளவில் வலுப்படுத்தும் நோக்கில் அஇஅதிமுகவில் புதிய பொறுப்பாளர்களுக்கான நியமன விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன.
இந்நிகழ்ச்சியில் பொள்ளாச்சி தெற்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மு.இளஞ் செழியன், சார்பணி மாவட்ட செயலாளர் ஷி.வி. நாகராஜ், விசுவநாதன், யு.கே.பி ராதாகிருஷ்ணன், அண்ணாதொழிற்சங்க மாவட்ட செயலாளர் துபாய் ஆறுமுகம், மாவட்ட ஐடி விங் பொறுப்பாளர் சங்கர் கணேஷ், நகர கழக துணை செயலாளர் ஆறுமுகம், வக்கீல் வேல்மணி, வக்கீல் முருகானந்தம், சின்னவீரம்பட்டி காளிமுத்து, மாவட்ட விவசாய அணி செயலாளர் செல்வராஜ், குடிமங்கலம் ஒன்றிய கழகச் செயலாளர் அன்வர்ராஜன், மூங்கில்தொழுவு பிரனேஷ், பேரூர் கழகச் செயலாளர் நரிமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.மேலும் மடத்துக்குளம் தொகுதி ஒன்றிய கழகச் செயலாளர்கள் வக்கீல் காளீஸ்வரன், போகநாதன், சிவலிங்கம், தம்பு (எ) பார்த்தசாரதி மற்றும் வார்டு கழக செயலாளர்கள் வளையாபதி, தங்கவடிவு, மல்லிகை செல்வம், மகாலட்சுமி, வெண்டர் அப்பாதுரை, கோவிந்தராஜ், சகுந்தலா, பிளம்பர் நாச்சிமுத்து, இளங்கோ, பேப்பர் குணா, குருவாயூரப்பன் ணிஙீவிசி, மைக் செல்வி, மினிடோர் சுப்பிரமணியம், பாண்டியன், ரவி, ராஜசேகர், சந்தை வேலாயுதம், சரவணன், சிவசாமி, காமாட்சி, அற்புத ராஜ், சந்திரிகா, சாந்தி, ரங்கராஜ், கொங்கு செல்வராஜ், ஆட்டோ அசோக் உள்ளிட்ட சார்பணி நிர்வாகிகள், உடுமலை மற்றும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



■ திருப்பூர் மாவட்டம் சின்னவீரன்பட்டியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை சுத்தமான கிராமம், பாதுகாப்பான கால நிலை என்ற தலைப்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஊராட்சி செயலாளர் முன்னிலையில் பொறுப்பு அதிகாரி தலைமையில், தூய்மை பணியாளர்கள கிராமப்புறங்களில் தூய்மையாக வைத்துக் கொள்வது, குப்பைகளை தரம் பிரிப்பது சம்பந்தமாக ஆலோசனைகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஊராட்சி செயலர் செல்வராணி அவர்கள் ஏற்பாடு செய்தார்.



# “பிளாஸ்டிக்கை ஒழிப்போம்... தென்காசியைக் காப்போம்!” உலக சுற்றுச்சூழல் தினத்தில் கலெக்டர் முழக்கம்!

தென்காசி, ஜூன்.6-
உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு, தென்காசி இரயில்வே பீடர் சாலையில் வனத்துறை சார்பில் மரம் நடும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.
இந்நிகழ்ச்சியில், தென்காசி மாவட்ட புதிய ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், இ.ஆ.ப. நேரில் கலந்துகொண்டு, மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா.ராஜ்மோகன், இ.வ.ப. முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டு வைத்து விழாவினைத் துவக்கி வைத்தார்.பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர், "ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் (நெகிழி) பொருட்களை முற்றிலும் ஒழிப்பதும், மறு பயன்பாட்டை அதிகரிப்பதுமே இந்த நாளின் முக்கிய தீர்வுகளாகும். எனவே, நமது இயற்கை வளத்தை மீட்டெடுக்க அனைவரும் பெருமளவில் மரக்கன்றுகளை நட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை ஒழிக்க ஒட்டுமொத்தப் பொதுமக்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, தென்காசி மாவட்டத்தைச் சுகாதாரமான மாவட்டமாக மாற்றிட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.
இவ்விழாவில் உதவி வனப் பாதுகாவலர் நெல்லை நாயகம், வனச்சரகர் செல்லத்துரை, வனவர்கள் சங்கர்ராஜா, பாரதி மற்றும் ஆகாஷ் ஐ.ஏ.எஸ் அகாடமி குழுவினர்கள் உட்படப் பொதுமக்கள் பலரும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், இ.ஆ.ப., மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், முதலைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள சமணர் படுக்கையில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ புதுச்சேரிக்கு வருகை தந்துள்ள தமிழ்நாட்டின் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை அமைச்சர் நமச்சிவாயம் அவர்கள் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.



■ மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், இ.ஆ.ப., மன்னர் திருமலை நாயக்கர் மஹாலில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை நேரில் ஆய்வு செய்து பார்வையிட்டார். மேலும், தரைத்தள கற்கள் அமைத்தல், தள அருங்காட்சியக மேம்பாடு, சிற்ப முற்றம், மழைநீர் வடிகால் வசதி, நவீன கழிப்பறைகள் உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து, பணிகளை தரமாகவும் விரைவாகவும் நிறைவு செய்ய தேவையான அறிவுரைகளை வழங்கினார்.



■ திருப்பூரில் மாநகராட்சி மணியகாரம்பாளையம் பகுதியில் களமிறங்கிய மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், சாலைகளில் உள்ள குப்பைகளை உடனடியாக அகற்ற அதிரடி உத்தரவு. மக்களுக்கான பணிகளில் மெத்தனம் கூடாது. சுகாதாரம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு கமிஷனர் எச்சரிக்கை விடுத்தார்.

# தவெக நிர்வாகி கார் மோதி தள்ளுவண்டி கடை சேதம்: கடைக்காரர் மீது தாக்குதல்!

காளியூர், ஜூன்.6-
காளியூரைச் சேர்ந்த வள்ளியம்மாள் (50) என்பவர் தள்ளுவண்டி கடை வைத்து நடத்தி வருகிறார். கோபியில் தள்ளுவண்டி கடைக்காரர் மீது தாக்குதல் நடத்தியதாக தவெக நிர்வாகி சசிகுமார் மீது புகார் எழுந்துள்ளது. புகாரின் பேரில் தவெக நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்காத போலீசார், வள்ளியம்மாளை மிரட்டியதாக புகார். பெரிய கொடிவேரி பேரூர் கழக தவெக செயலாளர் சசிகுமார் கார் மோதி வள்ளியம்மாளின் தள்ளுவண்டி கடை சேதமடைந்துள்ளது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000